**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.54/2025 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வசந்த சேகரன் | த–பெ /க.பெ. | பெரியசாமி |
| ஊர்: | : | கோச்சடை, மதுரை | சமயம்: | |
| வயது: | : | 73/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மளிகை கடை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.05.2026**

-------------------------------------------------------------------------------------------------------

**19.05.2026**
**முதல் விசாரணை**

1) நான் புகார்தாரரிடம் இருந்த எந்த ஒரு தொகையும் பெறவில்லை, வீட்டை ஒத்திக்கு வைத்து பணம் தருவதாக கூறவில்லை, எந்த ஒரு காசோலையும் நான் கொடுக்கவில்லை. வழக்கு தொடர்பான அறிவிப்பு நான் பெறவில்லை. வழக்கிற்கும் எனக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை. வழக்கு காசோலைக்கும் எனக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை. வழக்கு காசோலையை கொடுக்க நான் கடமைபட்டவன் இல்லை. ரெப்கோ வங்கியில் இருந்து அறிவிப்பு பெற்றேன் **(அறிவிப்பு எ.ம.சா.3 ஆக குறியிடப்படுகிறது ( ரெப்போ வீட்டுக்கடன் அறிவிப்பு எ.ம..சா.ஆ.4 ஆகும். ரெப்போ வீட்டுக்கடன் 03.05.2024 உடைய அறிவிப்பு எ.ம.சா.ஆ.5 ஆகும். வழக்கு எனக்கு தொடர்பு எனக்கு இல்லை என்று கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்தேன் ( 30.03.2024 தேதியுடைய புகார் எ.ம.சா.ஆ.6 ஆகும். முதியோர் நல துறையில் கொடுத்த கடிதம் எ.ம.சா.ஆ.7 ஆகும். புகார்தாரர் எனது மருமகள் ஆவார். வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வந்த விசாரணை அழைப்பாணை எ.ம.சா.ஆ. 8 ஆகும்.**

**சமூக நலன் மற்றும் உரிமைத்துறைக்கு எனது மகன் மற்றும் மருமகளிடம் இருந்து பாதுகாப்பு கேட்டு கொடுத்த மனு எ.ம.சா.ஆ.9 ஆகும். RTI விண்ணப்பம் மற்றும் அதற்கான பதில் ஆவணங்கள் எ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை –** புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு காலம் கேட்டுக்கொண்டதால் ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.19 14:26:27 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.